Judicial Form No.53
(See Rule 43)
DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**M.C.1/2024**
**2024-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 05-ம் தேதி வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் ம.சா. 1 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம.சா. | - | 1 | தொழில் | - | பகுதி நேர வேலையாக கண்ணன் ஏஜென்சி கடையில் வேலை பார்க்கிறேன். |
| பெயர் | - | சிந்து | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | பிரபு | சமயம் | - | |
| கிராமம் | - | அண்ணாநகர் | வயது | - | 29 |
| சாதி | - | | | | |

**<u>05.12.2024</u>**

**<u>(எதிர்மனுதாரர் ஆஜர் )</u>**

**<u>முதல் விசாரணை</u>**

1. எனது தரப்பில் ஆணையுறுதிப் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும்.

| ஆ. எண். | ஆவணம் | ஆவண தன்மை | ஆவண குறியீடு |
|---|---|---|---|
| 1. | திருமண அழைப்பிதழ் அசல் | அசல் | ம.சா.ஆ.1 |
| 2. | 1-ம் மனுதாரர் எதிர்மனுதாரர் திருமணத்தின் போது எடுத்துக்கொண்ட புகைப்படம் | நகல் | ம.சா.ஆ.2 |
| 3. | 1-ம் மனுதாரர் ஆதார் அட்டை | அசலோடுஒப்பீடு செய்யப்பட்டது | ம.சா.ஆ.3 |
| 4. | 2-ம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் | அசலோடுஒப்பீடு செய்யப்பட்டது | ம.சா.ஆ.4 |
| 5. | 2-ம் மனுதாரரின் ஆதார் அட்டை | அசலோடுஒப்பீடு செய்யப்பட்டது | ம.சா.ஆ.5 |
| 6. | 3-ம் மனுதாரரின் பிறப்புசான்றிதழ் | ஆன்லையன் நகலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. | ம.சா.ஆ.6 |
| 7. | 3-ம் மனுதாரரின் ஆதார் அட்டை | அசலோடுஒப்பீடு செய்யப்பட்டது | ம.சா.ஆ.7 |

பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>எதிர்மனுதாரரின் குறுக்கு விசாரணை</u>**

1. நான் புகார் மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள விசயங்களை வழக்கறிஞருக்கு சொல்லி வழக்கறிஞர் தயார் செய்து அதனை படித்துப்பார்த்து நான் கையொப்பம் செய்தேன்என்றால் சரிதான். இந்த வழக்கு எண் என்ன என்றால் எனக்கு தெரியாது. சாட்சி தற்போது எனது வழக்கு எண் 1 என்று தானாக சாட்சியமளிக்கிறார். முதல் விசாரணையில் எனது வயது என்னவென்று சொன்னேன் என்றால் 29 என சொன்னேன். நிரூபண வாக்குமூலத்தில் எனது வயது 28 என உள்ளது என்றால் சரிதான். எனது மனுவில் நான் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல நான் மனு தாக்கல் செய்யும் போது எனது வயது 28 ஆகும். எனது மனுவில் கணவர் பெயர் பிரபு என உள்ளது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் நான் செய்த தவறுகளை மன்னித்து என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றாலும் எதிர்மனுதாரர் என்னை அவரோடு அழைத்து செல்ல தயாராக உள்ளார் என்றாலும் நான் அவரோடு சேர்ந்து வாழ தயாராக இல்லை. என்னால் அவரோடு வாழமுடியாது. எதிர்மனுதாரருடன் நான் சேர்ந்து வாழ தயாராக இல்லை என்பதால் எனக்கு கோரியபடி ஜீவனாம்சம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. என்னை எதிர்மனுதாரர் அவமானப்படுத்தி வேறோரு நபருடன் தொடர்பு படுத்தி அடிக்கடி பேசுவதால் தான் நான் அவரோடு சேர்ந்து வாழ இயலாது என்று சொல்லுகிறேன். எனக்கும் எனது குழந்தைகளுக்கும் ஜீவனாம்சம் வேண்டும்.

**( எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டிக்கொண்டதின் படி குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.